**சுருக்கம்**

நெடுஞ்சாலைத்துறை – நிலம் கையகப்படுத்துதல் – திருப்பூர் மாவட்டம் – அவினாசி வட்டம் – அக்ரஹார பெரியபாளையம் கிராமம் புல எண். 171/4A1C1 ல் 760 ச.மீ. நிலம் திருப்பூர் – விஜயமங்கலம் சாலையில் பாலம் அமைக்கவும் – சாலையினை விரிவுபடுத்துவதற்கும் நிலமெடுப்பு செய்தல் – தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001 பிரிவு15 (1)ன் கீழான அறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடுதல் ஆணை வெளியிடப்படுகிறது.

---

நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் (எச்.எஸ்2) துறை

அரசாணை (டி) எண். 257 நாள் 16–12–2013

மார்கழி 1 , திருவள்ளுவராண்டு 2044

படிக்கவும்:–

திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் கடித எண்.9677/2011/ஊ2, நாள் 21–11–2011 மற்றும் 13–02–2012.

*******

**ஆணை:-**

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், அக்ரஹார பெரியபாளையம் கிராமம், திருப்பூர் – விஜயமங்கலம் சாலையில் நல்லாற்றின் குறுக்கே கி.மீ. 8/8ல் பாலம் அமைக்கவும் சாலையினை விரிவுபடுத்தவும் நிலங்கள் தேவைப்படுகிறது என்பதால் அக்ரஹார பெரியபாளையம் கிராமம் புல எண். 171/4A1C1 ல் 760 ச.மீ. புன்செய் நிலங்களை கையகம் செய்யும் பொருட்டு திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001 பிரிவு 15 (1) இன் கீழான அறிவிக்கைக்கு அரசால் ஏற்பளிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிட ஆணையிடப்படுகிறது.

2. இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ள அறிவிக்கையினை தமிழ்நாடு அரசிதழில் அடுத்த வெளியீட்டில் வெளியிடுமாறும் அவ்வாறு வெளியிடப்படும் அரசிதழின் 10 நகல்களை அரசு முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9, மாவட்ட வருவாய் அலுவலர், திருப்பூர் ஆகியோருக்கு அனுப்புமாறும் அரசு மைய அச்சகத்தின், பணி மேலாளர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை – 79. (இ)
தலைமைப் பொறியாளர் (கட்டுமானம் (மற்றும்) பராமரிப்பு), நெடுஞ்சாலைத்துறை, சென்னை – 5
தலைமைப் பொறியாளர் (திட்டங்கள்), நெடுஞ்சாலைத் துறை, சென்னை– 15
மாவட்ட ஆட்சியர், திருப்பூர்
மாவட்ட வருவாய் அலுவலர், திருப்பூர்
தலைமை இருப்பிட தணிக்கை கணக்காயர், சென்னை–9
நகல்
முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர்,
நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை, சென்னை–9
வருவாய்த் துறை, சென்னை – 9
இ.கோ/உ.ந

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

## இணைப்பு

## அறிவிக்கை

திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், அக்ரஹார பெரியபாளையம் கிராமத்தில் அமைந்துள்ளதும் கீழ்காணும் விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான நிலங்கள் ஒரு பொது நோக்கத்திற்காக அதாவது திருப்பூர் – விஜயமங்கலம் சாலையில் நல்லாற்றின் குறுக்கே கி.மீ. 8/8ல் பாலம் அமைக்கவும் சாலையினை விரிவுபடுத்துவதற்கும் நிலமெடுப்பு செய்ய தேவைப்படுகின்றது என்று தமிழ்நாடு அரசுக்கு தோன்றுவதால் நிலத்தை கையகப்படுத்தவும், ஏற்கனவே முடிவு செய்தபடி மேற்படி நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகையை நெடுஞ்சாலைத்துறையின் திருப்பூர் மாவட்ட வருவாய் அலுவலர் அவர்களால் பராமரிக்கப்படும் வைப்புக் கணக்கிலிருந்து வழங்கவும் தீர்மானித்து, மேற்காணும் நிலங்களின் உரிமையாளர், உரிமை கோருபவர், அனுபவத்தில் வைத்துள்ளவர்கள் அளித்த காரணங்களையும் பரிசீலனை செய்த பின் 2001 ம் ஆண்டு தமிழ்நாடு நெடுஞ்சாலை சட்டம் பிரிவு 15 உட்பிரிவு (1)ன் கீழ் (தமிழ்நாடு சட்டம் 34/2002) பின்வரும் அறிவிப்பு பிரசுரம் செய்யப்படுகிறது.

## அறிவிப்பு

தமிழ்நாடு நெடுஞ்சாலைச் சட்டம் 2001 பிரிவு 15 உட்பிரிவு (1) இன் கீழ் மேதகு தமிழக ஆளுநர் அவர்கள் திருப்பூர் மாவட்டம், அவினாசி வட்டம், அக்ரஹார பெரியபாளையம் கிராமம் புலஎண். 171/4A1C1ல் திருப்பூர் – விஜயமங்கலம் சாலையின் நல்லாற்றின் குறுக்கே கி.மீ. 8/8ல் பாலம் அமைக்கவும் சாலையினை விரிவுபடுத்துவதற்கும் கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ள 760 ச.மீ. நிலம் கையகப்படுத்தப்படுகிறது என இதன் மூலம் அறிவிக்கின்றார்.

இந்நிலங்களின் வரைபடம் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டாட்சியரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றை அலுவலகப் பணி நேரத்தில் எப்போது வேண்டுமானாலும் பார்வையிடலாம்.

## விவர அட்டவணை

திருப்பூர் மாவட்டம்      அவிநாசி வட்டம்

## அக்ரஹார பெரியபாளையம் கிராமம்

ரயத்துவாரி புஞ்சை க.ச. 171/4A1C1, தற்போதைய உட்பிரிவு ஆவணங்களின்படி க.ச. 171/5, வடக்கில் க.ச. 172 எண்ணுள்ள நில அளவை புலத்தாலும் கிழக்கில் 171/4A1C1 (பாகம்) நில அளவை புலத்தாலும், தெற்கில் க.ச. 190 நில அளவை புலத்தாலும் மற்றும் மேற்கில் க.ச 172 எண்ணுள்ள நில அளவை புலத்தாலும் சூழப்பட்டதும் கருப்பபண்ணாடி 1) சுப்பபண்ணாடி 2) என்பவர்களுக்கு சொந்தமானதுமான நில அளவை எண். 171/4A1C1 (பகுதி) கொண்டதுமான ரயத்துவாரி புஞ்சை நிலம்.

“1 காம்பவுண்ட் சுவர்”      (பரப்பு 760 ச.மீ)

ராஜீவ் ரஞ்சன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.